**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள்**
**ஆணை பிறப்பிப்பவர்: மரு.கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப.,**

செ.மு.ஆ.எண்.வ6/4696/2019 நாள்: 10.02.2022

பொருள்: பணியமைப்பு - தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகு - விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம் - ஊர்நல அலுவலர் நிலை.II திரு.அ.மாரிக்கண்ணண் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது - இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
23 FEB 2022
விளாத்திகுளம்.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.120 தொழிலாளர் (மற்றும்) வேலைவாய்ப்புத் துறை நாள்: 26.06.1995.
2. அரசாணை (நிலை) எண்.9 தொழிலாளர் (மற்றும்) வேலைவாய்ப்புத் (க்யூ 1)துறை நாள்: 19.01.1998.
3. அரசாணை (நிலை) எண்.61 தொழிலாளர் (மற்றும்) வேலைவாய்ப்புத் (க்யூ 1)துறை நாள்: 19.07.2006.
4. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணைகள் எண். வ6/4696/2019-1,2 நாள்: 30.11.2019
5. அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பத் துறை நாள்: 26.02.2021
6. அரசு கடிதம் எண் 6895/இ3/2021-5 நாள்: 14.12.2021

--------------------

**ஆணை:**

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரகம் தேர்தல் பிரிவில் உதவியாளராகப் பணிபுரிந்து 16.12.2018 அன்று பணியிடைக்காலமான திரு.நா.அனந்தப்பன் என்பவரின் வாரிசுதாரரும், மகனுமாகிய திரு.அ.மாரிக்கண்ணன் என்பவர் படிக்கப்பட்ட 4-ல் கண்டுள்ள செயலாணைகளின்படி கருணை அடிப்படையில் ஊர்நல அலுவலர் நிலை-II ஆக தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்டு, 30.11.2019 பி.ப பணியேற்பு செய்துள்ளார்.

படிக்கப்பட்ட 5-ல் கண்டுள்ள அரசாணை மற்றும் படிக்கப்பட்ட 6-ல் கண்டுள்ள அரசுக் கடிதத்தின் அடிப்படையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் நிலையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.அ.மாரிக்கண்ணன் என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் 30.11.2019 பி.ப முதல் வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

இப்பொருள் தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சான்றளிக்கப்படுகிறது. இச்செயலாணை மற்றும் பணிப்பதிவேடு ஆகியவற்றை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை அனுப்பவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு: பணிப்பதிவேடு.

மாவட்ட ஆட்சியருக்காக,
தூத்துக்குடி.

16/02/22

பெறுநர்
திரு.அ.மாரிக்கண்ணன்,
ஊர்நல அலுவலர் நிலை.II,
ஊராட்சி ஒன்றியம், விளாத்திகுளம்.
(அலுவலகத் தலைவர் மூலமாக)

நகல்:

1. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை-15.
2. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), விளாத்திகுளம்.
3. முக்கிய ஆணைத் தொகுப்பு.